# கற்பகம்



## சோபிதப் பொங்கல்

கதிரவன் கதிரெனச் சிறதுகள் விரியுது
கற்பகக் கண்கள் கனிகள் சொரியிது
விதிமுறை பதனீர் வெண்ணுரை தள்ளுது
விழிப்புறும் பொங்கல் விதம்போல் மிளிருது
பதிதனில் பனைமரம் பயன்பல பரவுது
பல்லாண்டு பல்லாண்டு பலமெனப் பகருது
துதிபெறும் தைதனில் சோபிதப் பொங்கல்
சுவைதர வெல்லமும் துணையிதம் பொங்குது

கவிஞர் அரியாலையூர் வே. ஐயாத்துரை

தை 1990.

விலை ரூ. 4-00





PALM

# கற்பகம்

தை

1990

மலர் — 11

இதழ் — 1

வெளியீடு:

வடமாகாண
தெ.ப.பொ. கூட்டுறவு
சங்கங்களின் சமாஜம்,
330, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்.

தொலைபேசி; 22713

ஆசிரியர்:

கே. வி. நடராஜன்

அச்சாளர்கள்;

உமா பிறிண்ட்டேர்ஸ்

32,
நல்லூர் குறுக்கு வீதி
நல்லூர்.


## புத்தாண்டே!

## பொங்கல் புதுநாளே!

பொங்கல் புது நாள் வந்து விட்டது. எல்லோர் உள்ளத்திலும் ஒருவகை புதுத்தென்பும் — தெளிவும் பிறக்கின்றது, அதே வேளையில் முந்தைய ஆண்டுகள் ஏற்படுத்திச் சென்ற இரணங்களின் வடுக்கள் மாறாத மறையாத நிலையில் — இந்த ஆண்டையும் தைத் திருநாளையும் வாழ்த்தி வரவேற்கின்றோம்.

புத்தாண்டே! பொங்கல் புதுநாளே! உம்மைப் போற்றுகின்றோம்; வாழ்த்தி வரவேற்கின்றோம். பொல்லாத சொற்பனமாக இல்லாமல் எல்லாம் நல்ல படியாக நடக்க நல்லருள் புரிவாய் என ஒவ்வொரு தமிழ் மகனும் அவாவுறுகின்றான். அவ்வளவுக்கு நைந்து — நொந்து போய்விட்ட நிலையிலும் பொங்கல் புது நாளுடன் புதுப்பொலிவும் நிம்மதியும் பெறலாமென்ற நம்பிக்கை.

தைத்திருநாள் உழவர் தினமாக இருப்பினும் அதனை மருவியே மற்றெல்லாத் தொழிலும் சிறப்பெய்துகின்றன.

பனைத் தொழிலுடன் சம்பந்தப்பட்ட வல்லுனர்க்கும் தைத் திருநாளுடன்தான் அவர்களுடைய தொழிலைத் தொடங்குதற்குரிய காலமுமாகும்.

இத்திருநாளில் பனைவிழா: பனைக்கும் விழா வெடுத்து தமது தொழிலுக்கு மூலாதாரமாக வுள்ள பனைக்கு பட்டுத்தி பொங்கிப் படைத்து நன்றிக்கடன் செய்யும் வைபவமும் இன்றும் சிற்சில கிராமங்களில் நடைபெறுவதைக் காணலாம்.

பனைத்தொழில் தாபனமயப்படுத்தப்பட்டு பல்லாண்டுகள் ஆகின்றன அவை பனைத் தொழிலாளர் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களாக செயலாற்றுவது சகலரும் அறிந்ததே.

கடந்த கால அசம்பாவிதங்களினால் இத் தாபனங்கள் வெகுவாக நொடித்துப் போய் விட்டதும் உண்மையாகும்.

இருந்தும் இவை இன்றும் உயிர் வாழ்வதற்கு அங்கத்தவர்களின் உறுதியும் தளராத நெஞ்சமுமே காரணமாகும்.

இன்று அவர்கள் சங்கங்களை வெகுவாக நேசிக்கிறார்கள். சங்கமே தமக்குச் சரியான பாதையை காட்டமுடியும் என்ற நம்பிக்கை ஒவ்வொரு அங்கத்தவர்களின் உள்ளத்திலும் ஆழப்பதிந்துவிட்டது.

அவர்கள் வைத்துள்ள நம்பிக்கை வீண் போகாது. ஏனெனில் புதிய ஆண்டும் பொன் பொழுதாம் தைத் திருநாளும் போதிய நம்பிக்கையை பல வழிகளிலும் ஏற்படுத்தி வருவதை இப்போதிருந்தே காணக்கூடியதாகவுள்ளது.

---

**சங்கங்களின் அங்கத்தவர், பணியாளர், கற்பகம் வாசகர், எழுத்தாளர், ஆதரவாளர் அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த**

# பொங்கல் புதுநாள் வாழ்த்துக்கள்.

— கற்பகம்.

# தாயகத்தில் வளரும்

மல்லாகம், சங்கானை, தெல் லிப்பளை, மானிப்பாய் ஆகிய நான்கு சங்கங்களின் கூட்டமைப் பில் அமைக்கப்பட்டதுதான் சங் கானை வடிசாலை சமாசம். சுமார் 15 லட்சம் முதலீட்டுடன் ஆரம் பிக்கப்பட்ட இவ்வடிசாலை சமா சம் ஓராண்டை பூர்த்தியாக்கி புதிய நிர்வாகசபைத் தெரிவும் நடை பெற்றுள்ளது,

இன்று யாழ். மாவட்டத்தில் பல சிரமங்களின் மத்தியில் இயங்கும், ஒரேயொரு வடிசாலை இதுவேயாகும் இதன் உற்பத்தித் திறன் மிக உச்சநிலையை அடைந் து பல லட்சம் ரூபா இலாபத் தில் இயங்குவதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

தற்பொழுது மல்லாகம் சங்கத் தின் பொதுமுகாமையாளர் திரு. யே. பி. குணரட்ணம் மேற்படி வடிசாலை முகாமையாளராகவும் தெல்லிப்பளை சங்கக் கணக்காளர் திரு. அ. அற்புதம் கணக்காள ராகவும் கடமைபுரிகிறார்கள், இவர்களைவிட 8 பணியாளர்கள் கடமை செய்கிறார்கள்

கடந்த முகாமை காலத்தில் ஆறு மாத உற்பத்தியிலும் பார்க்க தற்போதைய உற்பத்தி 50% வீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டுள்ளது இதற்கான காரணம் தற்போது இங்கு கடமை புரியும் பணியாளர்களின் ஒத்துழைப்பும் திறமையுமே இதற்கு முக்கிய காரணமாகு மென பொதுமுகாமையாளர் திரு,யே. பி குணரத்தினம் அவர் கள் தெரிவித்தார்

யாழ். மாவட்டத்தில் பல வடி சாலைகள் இருந்தும் இயங்க முடி யாத சூழ்நிலையின் மத்தியில் சங் கானை வடிசாலை தற்போதைய நிர்வாகத்தின் திறமையினால் இயங்க வைக்க முடிந்ததென்றும் இதனால் இந்த நெருக்கடி வேளை யிலும் யாழ். மாவட்டங்களில் இயங்கும் ஒரேயொரு வடிசாலை என்ற பெருமையைப் பெறுகின் றது என்றும் குறிப்பிட்டார்,


# தொழிற்சாலை

இவ்வடிசாலையை திறம்பட இயக்குவதற்குபனை அபிவிருத்திச் சபைதலைவர் திரு. க. நடராசா அவர்களின்மேலான ஒத்துழைப்பு போற்றப்படவேண்டியது அத்து டன் பனை அபிவிருத்திச் சபை யின் உற்பத்தி உத்தியோகத்த ரான திரு. கே சிவகணேசனின் நேரடி மேற்பார்வையில் உற்பத்தி உதவியாளர் திரு கே. யோகநாத னின் தொழில் நுட்பத்திலும் இங்கு வடிக்கப்படும் சாராயத் தின் தரம் உறுதிப்படுத்த ப்பட்டு விற்பனைக்கு வருகின்றது. தற்

12-ம் பக்கம் பார்க்க.

மனைவியை அடிக்கும் பிரச்னை எல்லாக் கல்வி, சமுதாய மற்றும் பொருளாதார எல்லையைக் கடந்து நிற்கிறது. ஒவ்வொரு வம்சத்திலும் மனித இனத்தொகுதியிலும் மனைவிகளை அடிப்பவர்கள் உண்டு. அவர்கள் மருத்துவர்களாக, வழக்கறிஞர்களாக, வியாபாரிகளாக, நீதிபதிகளாக, காவலாளர்களாக, தெருவிலுள்ள சாதாரண மனிதர்களாக இருக்கிறார்கள். அவர்களில் ஆறு இலக்க வருமானமுடையவர்களும் நலவாழ்வுத் துறையிலுள்ள ஆண்களும் அடங்குவர்.

# தாக்கப்படும் மனைவிகள்



மனைவியை அடிப்பதுஅதிர்ச்சி தரும் விதத்தில் ஒரு சாதாரணமான சம்பவமாக இருக்கிறது. 'இன்றைய உளவியல்' (Psychology Today) என்ற பத்திரிகை, ''பத்துப் பெண்களில் ஒரு பெண் தன் மணவாழ்க்கையில் ஏதாவது ஒரு சமயத்தில், அவளுடைய கணவனால் மோசமாக (அடிக்கவோ, உதைக்கவோ கடிக்கவோ அல்லது இன்னும் மோசமாகவோ) தாக்கப்படுகிறாள்,'' என்று அறிக்கை செய்கிறது. ஓர் ஆண்டுக்குப் பின்பு 'குடும்ப உறவுகள்' (Family Relations) என்ற பத்திரிகை ''ஐக்கிய மாகாணங்களில் இரண்டு பெண்களில் ஒரு பெண் வீட்டில் வன்முறையை அனுபவிக்கிறாள்'' என்று குறிப்பிட்டு இந்தப் பிரச்னை இன்னும் அதிகரிப்பதை சுட்டிக் காட்டுகிறது. 1987-ல் வெளியான அறிக்கையின்படி கனடாவில், பத்தில் ஒரு பெண் தாக்கப்படுகிறாள். மற்ற நாடுகளிலும் மதிப்பீட்டானது ஏறக்குறைய இந்த அளவிலேயே உள்ளது.

நியுயோர்க் மாவட்ட வழக்கறிஞர், தாக்கப்படும் மனைவிகளின் இந்தப் பிரச்னைக்கு மேலும் சாட்சியங்களைக் கூட்டுகின்றார். '' அமெரிக்க சமுதாயத்தில் பெண்களிற்கு எதிரான வன்முறையானது தொற்று நோய்க்கு ஈடாகப் பரவியுள்ளது. ஒவ்வொரு 18 வினாடியிலும் ஒரு துணைவி அடிக்கப்படுகிறாள் என்றும் ஒவ்வொரு வருடமும் 60 லட்சம் பெண்கள் தாக்கப்படுகின்றனர் என்றும் குற்ற விசாரணைக் குழு கணக்கிட்டுள்ளது. ' கற்பழிப்பு, பொருளுக்காக தாக்குதல் மற்றும் வாகன விபத்து ஆகியவற்றின் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்படும் பெண்களைவிடவும் மனைவியை அடித்தலின் காரணமாகக் காயங்களோடு மருத்துவமனையில் சேர்க்கப்படும் பெண்கள் அதிகம், என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது சுமார் 4,000 பெண்கள் வருடந்தோறும் கொல்லப்படுகின்றனர்.

மனைவி தகாத முறையில் நடத்தப்படுவதானது, நன்கு காக்கப்பட்ட ஓர் இரகசியமாக இருந்தால், தாக்குகின்ற கணவனுக்கு நெருங்கியவர்கள், அதாவது அவனுடைய சிறந்த நண்பர்கள், உடன் வேலைசெய்வோர், வீட்டுக்கு வெளியே உள்ள குடும்ப அங்கத்தினர்கள் போன்றோர் அவன் மனைவியை அடிப்பவன் என்று ஒருபோதும் சந்தேகப்படாமல் இருக்கலாம். அவன் பலசமயங்களில் இலட்சிய முன்மாதிரியாக உயர்வாக நோக்கப்படும் அளவு தன்னுடைய வேலையிலும் சமுதாயத்திலும் செயல்படலாம். அடிப்பவர்களில் பலர் மதுபானக்கடையிலோ. தெருவிலோ, வேலைசெய்யும் இடத்திலோ நடக்கும் சண்டையிலிருந்து விலகி நடந்து செல்வர். தேவையிலிருப்போருக்குத் தான் அணிந்திருக்கும் சட்டையைக்கூட கொடுப்பவர் பலர்.

எனினும் தங்களுடைய திருமண துணைவியின் விஷயத்திலோ ஒரு சிறிய காரியம்கூட அவர்களைத் தீவிரமான கோபத்திற்குக் கொண்டுவிட்டுவிடும் — நேரத்துக்குத் தயார் செய்யப்படாத உணவு, பிடிக்காத உணவு, அவன் விரும்பாத விதத்தில் அமைந்த அவளுடைய உடை, தொலைக்காட்சியில் அவள் ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க விரும்பும் பொழுது அவன் வேறு ஒன்றைப் பார்க்க விரும்புவது. தாக்கப்பட்ட மனைவிகளின் மேல் நடத்தப்பட்ட ஒரு பிரிட்டிஷ் ஆராய்ச்சியானது, அந்த அடிகளுக்கு முன்னால் எந்தவித விவாதங்களும் நடைபெறவில்லை என்று வெளிப்படுத்துகின்றது. பல நிகழ்ச்சிகளில் அடிகளானது, '' மிகச் சாதாரணமான காரியங்களாகிய, மனைவி முட்டையின் மஞ்சட்கருவை உடைத்துவிடுதல் அல்லது குதிரை வால் என்ற தலை அலங்காரம் செய்து கொள்ளுதல்'' போன்றவற்றால் தொடங்கி வைக்கப்படு

கின்றன என்று அறிக்கைகள் காட்டுகின்றன.

மனைவியை அடித்த ஒரு கணவன் ''அவள் படுக்கைத் துணிகளில் சிக்கிக் கொண்டதால் தான் தூண்டப்பட்டதாக ஒப்புக் கொள்கின்றான். '' தூண்டப்பட்டேன்,, என்று அவன் கூறுவது, அவளைப் படுக்கையிலிருந்து உதைத்துக் கீழே தள்ளி மூளையில் பாதிப்பை ஏற்படுத்தும் அளவு அவள் தலையைத் தரையில் மோதியதை அர்த்தப்படுத்துகிறது. பல வருடங்களாக அடிகளால் துன்பப்பட்ட, தகாத முறையில் நடத்தப்பட்ட ஒரு மனைவி கூறுகின்றாள்; ''ஒரு நிகழ்ச்சியானது (நான்) சாப்பாட்டு மேஜையில் ஒரு குறிப்பிட்ட பொருளை வைக்க மறந்து போவதால்கூட தூண்டப்படலாம்,''

மணமாகி மூன்றரை ஆண்டுகளாகிய ஒரு மணப்பெண் தன்னுடைய மணவாழ்க்கையில் 60 தடவைகள் அடிக்கப்பட்டிருப்பதாகக் கணக்கிடுகிறாள். அவள் சொல்கிறாள்; '' என்னுடைய நண்பர்களை அவருக்குப் பிடிக்கவில்லை. படிப்படியாக நான் அவர்களைப் பார்ப்பதை நிறுத்தினேன்.'' கடைசியில் அவளுடைய குடும்பத்தைப் பிடிக்கவில்லை என்பதால் அவர்களைப் பார்ப்பதையும் நிறுத்திக்கொண்டாள் ''அவர்களுடன் தொலைபேசியில்தொடர்பு கொள்ள முயலுவது,மறுபடியும்அடிப்பதற்குப் போதுமான காரணமாக இருந்தது'' என்று அவள் விளக்குகிறாள் தகாத முறையில் நடத்தப்பட்ட மற்றொரு மனைவி சொல்கிறாள்; '' கடைசியில், இரவு உணவுக்கு என்ன செய்யலாம், தட்டு முட்டுச் சாமான்களை எப்படி வைக்கலாம் என்று என்னுடைய ஒவ்வொரு நடவடிக்கையும் என்னவாக இருக்க வேண்டும் என்று நான் அவரையே கேட்டேன்,,

மனைவியை அடிப்பதானது, அநேகமாக, மாலையிலோ, இரவிலோ அல்லது வார இறுதியிலோ நடக்கிறது என்று ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. அதன் விளைவாக, பலமாக அடிக்கப்பட்ட ஒரு பெண்ணுக்கு அவளுடைய சொந்த மருத்துவரை விடவும் மருத்துவமனையின் அவசர காலப் பணியாளர்களே சிகிச்சை அளிக்க வேண்டியுள்ளது. பல சமயங்களில் தாக்கப்பட்ட பெண்கள் சிகிச்சைக்காகக் காட்டும் காயங்கள், முக்கியமாக தலையிலும், முகத்திலும், இரத்தம் கசியும் காயங்களை உட்படுத்துவதாக இருக்கின்றன உட்காயங்களும் இருக்கின்றன—மூளையில் சிறிய பாதிப்பு, செவிப்பறையில்ஓட்டை மற்றும் மனைவி கருவுற்றிருந்தால் வயிற்றில் காயங்கள். பல சமயங்களில் கழுத்து நெரிக்கப்பட்டதற்கான குறிகள் கழுத்தில் காணப்படக்கூடியதாக இருக்கின்றன பல நிகழ்ச்சிகளில் உடைந்த தாடைகள், கைகள், கால்கள், விலா மற்றும் தோள் எலும்புகள் சரிசெய்யப்பட வேண்டியிருக்கின்

றன. ஏனைய பாதிக்கப்பட்டோர் தீக்கின்ற திரவங்கள் அல்லது அமிலத்தினல் உண்டான காயங் களுக்காக தீப் புண்களுக்கான சிகிச்சைக்கூடத்திற்கு அனுப்பப் படுகின்றனர்.

தாக்குகின்ற கணவன்மார்க ளைக் குறித்து ஒரு எழுத்தாளர் கூறுகின்ருர்; ''இந்த ஆட்கள் உண்மையிலேயே அதிக பயங்கர மானவர்கள். அவர்கள் பெண் களை அவர்களுடைய அறையில் பூட்டி வைக்கின்றனர், அவர்களு டைய எலும்பை உடைக்கின்ற னர் அவர்களை முடமாக்குகின்ற னர், கத்தியால் அவர்களை வெட் டுகின்றனர். மருந்துகளை அவர்கள் மேல்பிரயோகிக்கின்றனர். அவர் களை முகத்தில், வயிற்றில், மார் பில் குத்துகின்றனர். தங்களு டைய துப்பாக்கிகளை அவர்கள் தலைக்குக் குறிவைக்கின்றனர்— மேலும் அவர்களைக் கொல்கின் றனர். படுக்கைகளுடன் கட்டி வைக்கப்பட்ட மனைவிகளைப் பற் றியும், மின்சாரக் கம்பிகள் துண் டிக்கப்பட்டு உபயோகமற்றதாக் கப்பட்ட கார்கள் பற்றியும் அவள் ஓடிப்போக முயன்ருல் அவளையும் அவள் பிள்ளைகளையும் கொன்றுவிடுவதாகப் பயமுறுத் தல்கள் பற்றியும் அறிக்கைகள் இருக்கின்றன. இந்தச் சோகங் கள் முடிவற்றவையாக இருக் கின்றன.

அடிக்கடி நிகழக்கூடிய உடல் சம்பந்தப்பட்ட தாக்குதலுடன் கூட மேலுமாக பயமுறுத்தல்கள் குற்றச்சாட்டுக்கள், வசைகள், மனச்சோர்வு, பயங்கரத்தோற் றங்கள் மற்றும் தொடர்ந்த தூக்கமின்மை ஆகியவையும் உண்டு

அவளை நேசிக்கிறேன், அவளில் லாமல் வாழமுடியாது என்று அடிக்கடி அவளைப்பற்றி கூறும் தன்னுடைய மணவாழ்க்கைத் துணையின் மேல்—வருத்தம் தரும் தாக்குதலை நடத்துகின்ற அந்த மனிதன் எப்படிப்பட்டவன்? அடுத்த கட்டுரையில் அவனு டைய தோற்றம் பற்றி காண் போம்.

# தாக்குகின்ற கணவன்மார்கள்

மனைவியை அடிப்பவர்கள் அடிப்படையாக ஒரேவிதமான உள்தோற்றத்தைக் கொண்டிருக் கிருர்கள் என்பது நிபுணர்களின் ஏகமனதான கருத்து. மருத்துவர் கள், வழக்கறிஞர்கள், காவற் துறை அதிகாரிகள் மற்றும் சமூக சேவகர்கள் போன்ருேர் இக்கருத் தினை ஒப்புக்கொள்கின்றனர்— இவர்களுடைய தொழில்கள் இவர்களை குடும்ப வன்முறையு டன் தினமும் தொடர்புகொள்

கொண்டுவருகிறது. ஒரு நீதி மன்ற அதிகாரி சொன்னதாவது ''தற்காதல் கோளாறு, அதாவது தன் சரீரத்தின் மேல் மாத்திரமே அன்புகாட்டுதல் — இதுதான் அவர்களின் பிரதான குண விசேஷமாகும் தாக்குகின்றவனுக்கும் சிறுகுழந்தைக்கும் உள்ள ஒற்றுமைகள் பிரமிப்பூட்டுகிறது. கோபவெளியீடுகள் பற்றிய கதைகள் நான் வேலே சம்பந்தமாகத் தொடர்பு கொள்ளும் ஒவ்வொரு பெண்ணுலும் சொல்லப்படுகின்றன. தன்னுடைய சொந்தத் தேவைகளே எப்படிக் கவனித்துக் கொள்ளலாம் என்பதன் அடிப்படையிலேயே தாக்குபவனுல் உலகத்துடன் தொடர்புகொள்ள முடிகிறது'' இந்த அதிகாரி தாக்குபவனே ''சோஷியோபதிக்'' என்று முத்திரையிடுகிருர். அதாவது தன்னுடைய செயல்களின் விளைவைச் சீர்தூக்கிப் பார்க்க முடியாதவன்.

''தகாத விதத்தில் தாக்கும் ஆண்கள் பொதுவாக ஒரு தாழ்ந்த சுயதோற்றத்தினுல் துன்பப்படுகிருர்கள். இதே குணத்தை தங்களால் பாதிக்கப்படுகின்றவர்களிலும் உண்டுபண்ண முயலுகின்றனர் என்பது அக்கறையூட்டுவதாக இருக்கிறது'' என்பதாக ஓர் எழுத்தாளர் சொன்னுர். ''சொந்தம் பாராட்டுதல், பொருமை' பால்சம்பந்தப்பட்ட காரியங்களில் குறைவுபடுதல், மற்றும் தாழ்ந்த சுயமதிப்பு ஆகியவையே சாதாரணமாகப் பெண்களைத் தாக்கும் ஆண்களின் குறிப்பிடத்தக்க குணங்களாகும் என்று ஒரு பத்திரிகைச் செய்தி கூறுகிறது. மனைவியைத் தகாத விதத்தில் நடத்துபவனின் இந்தத் தோற்றத்தை ஒத்துக்கொள்ளும் விதமாகவே ஒரு குறிப்பிடத்தக்க மனயியல் நிபுணர் மேலும் தன் கருத்தைக் கூட்டுகின்றுர்: ''தாக்குதலானது' குறைவுள்ள மனிதன் தன் ஆண்மையை நிரூபிக்க உபயோகிக்கும் ஒரு வழி,,

தகாத முறையில் நடந்து கொள்ளும் ஆண் தன் வாழ்க்கை துணையின் மேல் தன்னுடைய அதிகாரத்தைக் காட்டவும்' கட்டுப்பாட்டை நிலைநாட்டவும் வன்முறையை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிருன் என்பது தெளிவாகத் தெரிகிறது மனைவியைத் தகாத முறையில் நடத்தும் ஒருவன் சொல்வதாவது; ''நாங்கள் அடிப்பதை நிறுத்தினுல் கட்டுப்பாட்டை இழக்கின்றோம். அதுவோ நினைக்க முடியாததும் பொறுத்துக்கொள்ள முடியாததுமாகும்.

அநேக சமயங்களில், காரணமின்றி, தாக்குகின்ற கணவன் நியாயமற்ற விதத்தில் உரிமை பாராட்டுகின்றவனுகவும் பொருமை கொள்ளவும் செய்கின்ருன். தன் மனைவிக்கும் தபாற்காரன், பால்க்காரன் ஒரு நெருங்கிய குடும்ப நண்பன் அல்லது அவள் தொடர்பு கொள்ளக் கூடிய யாராவது ஒருவருக்குமிடையே ஒரு காதல் தொடர்பைக்

கற்பனை செய்து கொள்ளலாம் அவன் தன் மனைவியை மோசமாக நடத்தி, உடலில் வலியை ஏற்படுத்தினாலும் அவளைப் பிரிவதைக் குறித்தும் அவளை இழப்பதைக் குறித்தும் மிகவும் பயப்படுகிறான். தகாதமுறையில் நடத்தப்பட்ட மனைவி அவனை விட்டுப் போய்விடுவதாகப் பயமுறுத்தினால் அவன் அவளையும் தன்னையும் கொன்றுவிடுவதாகப் பயமுறுத்தலாம்.

அநேகமாகப் பொறுமையானது மனைவி கருவுற்றிருக்கும்போது தன்னுடைய அவலட்சணமான தலையைத் தூக்கலாம். தன் மனைவியின் அன்பு தன்னிடமிருந்து வேறுபக்கமாகச் சென்றுவிடும் குழந்தையே அவளது கவனத்தின் மையமாக இருக்கும் என்று காரியங்களைப் பற்றி அவன் பயமுறுத்தப்படுவதாக உணரலாம். தாக்கப்பட்ட பல பெண்கள் கணவனின் தகாத நடத்தையின் முதல் அறிகுறி தாங்கள் முதல்முறையாகக் கருவுற்றிருக்கும்போது தங்கள் கணவன்மார்கள் தீவிரமாக வயிற்றில் குத்தியதே என்று தெரிவிக்கின்றனர். "தன் சொந்தச் சரீரத்தை மட்டுமே நேசிக்கும் அவனது விசேட குணமானது உண்மையில் அந்தக் கருவைக் கொல்ல முயற்சிக்கும் நிலைமைக்கு அவனைக் கொண்டு வரக்கூடும்" என்று ஒரு நீதிமன்ற அதிகாரி கூறுகின்றார்.

### ஒரு வன்முறைச் சுற்று

தாக்கப்பட்ட பல மனைவிமார்களால் உறுதிப்படுத்தப்பட்டவிதமாகவே, அனுபவிக்கப்படும் வன்முறைச்சுற்று, மனைவியை அடிப்பவனின் தோற்றத்தின் மற்றொரு அம்சமாகும். முதல் கட்டத்தில் கணவன் தகாத சொற்களைக் கொண்டு வசைப்படுத்தலை மட்டுமே செய்யலாம். பிள்ளைகளை அவளிடமிருந்து பிரித்துவிடுவதாகவும் இனி அவள் அவர்களைப் பார்க்கவே முடியாது என்றும் அவன் பயமுறுத்தலாம், பயந்துகொண்டு அவள் எல்லாம் தன் தவறு என்று ஒப்புக்கொண்டு அவனுடைய தகாத நடத்தைக்கு அவள்பொறுப்பேற்கலாம். அவள் அவனுடைய கைப்பாவையாகிவிடுகிறாள். அவன் அதிக அதிகாரத்தைப் பெறுகிறான். ஆனால் மேலும் அதிக செல்வாக்கை அவன் கொள்ள வேண்டும். இத்தகைய முதல் கட்டம் திருமணமான பின்பு எப்பொழுது வேண்டுமானாலும் வரலாம்—சில சமயங்களில் சில வாரங்களுக்குள்ளாகவே

இரண்டாவது கட்டத்தில் வன்முறை வெடித்துக் கொண்டு வரலாம்—உதைத்தல், குத்துதல் கடித்தல், அவள் முடியைப் பிடித்து இழுத்தல், அவளைத் தரையில் எறிதல், பாலுறவுச் செய்கையில் பலவந்தமாக ஈடுபடுதல். முதல்முறையாக மனைவி தன்மேல் தவறில்லை என உணரலாம். அவள் இதற்குக் காரணம் வெளியே உள்ள காரியமாக—வேலை செய்யுமிடத்தில் அழுத்தம், உடன் வேலையாட்களுடன் ஒத்துப்போகாமை—

போன்றவையாக இருக்கலாம் என்று நிதானிக்கின்றாள்.

வன்முறையின் வெளிப்பாட்டைத் தொடர்ந்து உடனடியாக அவன் மனஸ்தாபப்படுவதைக் கண்டு, அவள் கணவன் மீது இரக்கப்பட்டு ஆறுதலடைகின்றாள். அவன் இப்பொழுது சுற்றின் மூன்றாவது கட்டத்தில் இருக்கிறான். அவள்மேல் அவன் வெகுமதிகளைப் பொழிகின்றான் அவளுடைய மன்னிப்புக்காகக் கெஞ்சுகின்றான். இது மீண்டும் நடவாது என்று அவன் அவளுக்கு வாக்களிக்கின்றான்.

ஆனால் அது மீண்டும் மீண்டுமாக நடக்கவே செய்கிறது. இனிமேல் இரக்கம் காண்பிக்கப்படுவதில்லை. இப்பொழுது இது ஒரு வாழ்க்கை முறையாகவே ஆகிவிட்டது. பிரிந்து செல்வதாக அவள் பயமுறுத்தினால். அவளைக் கொன்று விடுவதாக பயமுறுத்துகிறான். அவள் இப்பொழுது அவனுடைய முழுச் செல்வாக்கின்கீழ் இருக்கிறாள். மனைவியை அடிப்பவனால் முன்பு குறிப்பிடப்பட்ட வார்த்தைகளை நினைவு கூருங்கள்: "நாங்கள் அடிப்பதை நிறுத்தினால், கட்டுப்பாட்டை இழக்கின்றோம். அதுவோ நினைக்கவே முடியாதது."

மற்றுமொரு ஒற்றுமை

எப்பொழுதும் மனைவியை தகாத விதத்தில் நடத்துபவன் அடிக்கத் தூண்டியதாக தங்கள் துணைவிகளையே குற்றம் சாட்டுகிறார். தாக்கப்பட்ட பெண்களுக்கான சேவையின் நிகழ்ச்சி நிர்வாகி அறிவிப்பதாவது; "நீ இதைச் சரியாகச் செய்யவில்லை அதனால் தான் நான் உன்னை அடிக்கிறேன்' அல்லது இரவு உணவு தாமதமாகி விட்டது' அதனால்தான் நான் உன்னை அடிக்கிறேன், என்பதாக தகாது நடத்துபவன் தன் பெண் துணையிடம் கூறுவான், இது எப்பொழுதும் அவளுடைய தவறு தான். உணர்ச்சிகளின் மேல் இத்தகைய தாக்குதல் வருடக்கணக்காகத் தொடரும் போது, அந்தப்பெண் அதை நம்பும்படி மூளைச் சலவை செய்யப்படுகிறாள்',

ஒரு மனைவி, அவள் செய்த தவறினால் அந்தத் தாக்குதல்களைத் தூண்டுவதாக அவள் கணவனால் சொல்லப்பட்டாள். "வன்முறையானது அதிகரிக்க, சாக்குப்போக்குகளும் அவ்விதமாகியது. மேலும் இது எப்பொழுதும், "பார், நீ என்னை என்ன செய்ய வைத்துவிட்டாய். இக் காரியங்களை நான் செய்யும்படி நீ ஏன் விரும்புகின்றாய்?",

மனைவியைத் தகாது நடத்திப் பின் திருந்திய ஒருவன், அவனுடைய தந்தையும் கூட மனைவியைத் தாக்குகின்றவன், சொல்வதாவது:"என் தந்தையால் தான் தவறு செய்ததை ஒருபோதும் ஒப்புக்கொள்ள முடியாது தன்னுடைய செயல்களுக்காக அவர் ஒருபோதும் பொறுப்பேற்றுக் கொண்டதோ அல்லது மன்னிப்

புக் கேட்டதே கிடையாது அவர் எப்பொழுதும் தன்னுல் பாதிக்கப்பட்டவளையே குற்றம் சாட்டுவார், அந்தமகனும் ஒப்புக் கொள்வதாவது அவள் தாக்கப் பட்டதற்கு என் மனைவியை நான் குற்றப்படுத்துவேன் வேருெருவர் 15வருடங்களாக நான் என் மனை வியையே அவள் ஒரு யெகோவா வின் சாட்சி என்பதற்காக தகாத வகையில் நடத்தினேன், நான் செய்வது எவ்வளவு மோசமானது என்பதை நான் பைபிள் படிக்கத் துவங்கும்வரை உணரவில்லை. இப் பொழுது அது என் வாழ்க்கை யில் ஒரு மோசமான ஞாபகம். அதை நான் மறக்க முயலுகி றேன், ஆனுல் அது எப்பொழு தும் அங்கே இருக்கின்றது.

தந்தையும் மகனும் இருவரும் மனைவியை அடிப்பவர்களாக இருக்கும் விவரம் அபூர்வமான தன்று. மாருக தாக்குகின்ற கணவன்மார்களின் பொதுவான தோற்றம் இதுவே. மனைவியை அடிப்பதானது தன் குடும்பத் தில் 150 வருடங்களுக்கு முன் செல்கின்றது. தந்தையிடமிருந்து மகனுக்கு என்று கடத்தப்பட்டு இருக்கின்றது என்று அந்த மகன் ஒப்புக் கொள்கின்ருன் குடும்ப வன்முறைக்கு எதிராக தேசிய கூட்டமைப்பின்படி குடும்ப வன் முறைக் காட்சிகளைக் காணும் பிள்ளைகளில் 60 சதவிகிதம் பையன்கள் கடைசியில் தாக்கு டவர்களாகவும் 50 சதவிகிதம் பெண்கள் பாதிக்கப்படுபவர்க ளாகவும் ஆகின்றனர்.''

ஒரு செய்தித்தாள் எழுத்தா ளர் செல்வதாவது அந்தப் பிள் ளைகள் தாக்குதலில் ஈடுபடாமல் மேலும் வெளிப்படையாக எந் தச் சேதமுமின்றி காணப்பட் டாலும் அவர்கள் என்றும் மறக்க முடியாத ஒன்றை கற்றுக் கொள்கின்றனர். அதாவது பிரச் னைகளையும் அழுத்தங்களையும் வன்முறையானவழிகளில் கையா ளுவது ஏற்றுக் கொள்ளப்படக் கூடியது

தங்கள் தந்தைகள் தங்கள் தாய்களை அடிப்பதைக் கண்ட பையன்கள் பல சமயங்களில் நங் கள் தாய்களின் மேல் தீவிரமாகத் திரும்புகின்றனர் அல்லது தங்கள் சகோதரிகளை கொன்றுவிடுவதாக மிரட்டுகின்றனர் என்று தாக் கப்பட்ட பெண்களுக்கான புகலி டத்தை நடத்துபவர்கள் கூறுகின் றனர். ஒருவர் சொன்னதாவது இது குழந்தைகளின் விளையாட் டுத்தனமன்று உண்மையில் வேண் டுமென்று நோக்கத்துடன் செய் யப்படுவது கோபத்தைக் கையாள தங்கள் பெற்ருேர் வன்முறையை உபயோகிப்பதைக் கண்ட பிள்ளைகள் அதையேதங்கள் தெரி வாகக் காண்கின்றனர்.

சிறு பெண்கள். சர்க்கரையினு லும் வாசனைப் பொருட்களினு லும் மற்றும் இன்பமான எல் லாவற்ருலும் செய்யப்பட்டிருக் கின்றனர் என்று குழந்தைகளுக் கான ஒரு பாட்டு கூறுகின்றது. இந்தச் சிறு பெண்கள் இவர்க

ளின்றி வாழ முடியாது என்று கணவன்மார் குறிப்பிடும் மனைவிகளாகவும் தாய்மார்களாகவும் வளருகின்றனர். அப்படியானல் நிச்சயமாகவே நீதியானது மனைவியைத் தாக்குவதற்கு எதிராக உள்ளது. ஆனல் யாருடைய நீதி —மனிதனுடையதா அல்லது கடவுளுடையதா

நன்றி: விழித்தெழு.

---

3-ம் பக்கத் தொடர்ச்சி

பொழுது இவ்வடிசாலை உற்பத்தியில் சிறந்து விளங்கிய போதிலும் கட்டட அமைப்பு முறை சரியான முறையில் இல்லை யெனவும் மிக விரைவில் இக் குறைபாடு நீக்கப்பட்டு நவின மயப்படுத்தபட இருப்பதாகவும் பொது முகாமையாளரால் தெரிவிக்கப்பட்டது

தற்பொழுது அயல் வடிசாலைகளின் செறிவு குறைந்த மது சாரத்தையும் (லோவைன்) பெற்று சுத்திகரிக்கபட்ட சாராயமாக்கியும் கொடுக்கப்படுகிறது அத்துடன் வெளியிலுள்ள சாலைகளின் (லோவைனையும்) சாராயமாக வடித்துக் கொடுப்பதற்கும் தம்மிடம் போதிய வசதிகள் இருப்பதாகவும் தெரிவித்தார்


எமது பொங்கல் நல்வாழ்த்துக்கள்

★ சஞ்சிகைகள்...........

★ புத்தகங்கள்...........

★ மற்றும் பிரசுரங்கள்...........

யாவுக்கும்

**உமா பிறிண்ட்டேர்ஸ்**

32, நல்லூர் குறுக்கு வீதி,

நல்லூர் - யாழ்ப்பாணம்.

# ஊர்வலம்.

எஸ்.வி.மூர்த்தி
தெ.ப.பொ.கூ.சங்கம்
கொடிகாமம்.

இரவு முழுவதும் நித்திரை இன்றி பூரணத்தின் மனம் அல்லற் பட்டுக்கொண்டிருந்தது. எப்போது விடியும் மகன் குமாரை எங்கே தேடுவது. அவனிற்கு என்னதான் ஆச்சுதோ? திண்ணைக் குத்தில் சார்ந்து கொண்டிருந்த பூரணத்தின் மனம் ஒரு நிலையில்லாது தவித்துக் கொண்டிருந்தது.

விடியற்புறக் கோழி கூவியதும் அதுவரை குறட்டை விட்டுக் கொண்டிருந்த கந்தப்பு யாரோ தட்டியெழுப்பியதைப் போல துடித்துப் பதைத்து எழும்புகின்றார். நாளொன்றுக்கு பத்துப் பனைக்கு மேல் ஏறி இறங்கும் கந்தப்பு அயர்ந்து தூங்கினால் ஆச்சரியம் இல்லைத்தான். ஐம்பது வயது சென்றாலும் கந்தப்புவின் விடாமுயற்சி சிறு வயதில் இருந்தே கஷ்ரப்பட்டவர் கந்தப்பு, தனது இருபதாவது வயதிலே பூரணத்தைக் கைப்பிடித்தார். இப்போது எட்டுப் பிள்ளைகளிற்கு தந்தையாக இருந்தும் குடும்பத்தை எவ்வளவு கௌரவத்தோடு கட்டிக்காத்து வருகின்றார்.

"இஞ்சருங்கோ கருப்பணிப் பனையளையாவது நேரத்தோடை சீவிப்போட்டு ஓடியாங்கோ" சொல்லிக் கொண்டே பூரணம் சாஞ்சிருந்த திண்ணைக்கு ஓய்வு கொடுத்தவளாக எழுந்து நின்றாள். எட்டுப்பிள்ளைகளில் ஒரே ஒரு ஆண்பிள்ளை அல்லவா குமார். அவன் மறைவை பூரணத்தால் எப்படித்தான் தாங்கிக் கொள்ள முடியும்? நாங்கள் எங்கே போய் விசாரிக்கிறது? "தம்பி படிக்கிற ரியூட்டறி உங்களிற்கு தெரியும் தானே! அங்க முதலில போவம். ரியூட்டறிக்கு போறதை விட்டுட்டு தம்பி சுந்தரம் வீட்டை போவம், ரவுனில ஏதும் 'பிரச்சினை எண்டால் அங்கதான் போயிருப்பான் போனகிழமையும் அந்தப் பிரச்சினை நடந்த மூட்டம் அங்கதானே நின்றிட்டு வந்தவன்

''அதுசரியப்பா அண்டைக்குத் தான் என்ரை குஞ்சு பின்நேரமே சிறியதேப்பன்ரை சயிக்கிலில்ல எங்கயோ சுத்திசுழண்டு வந்திட்டுதே! நேற்றுத்தான் என்ரை பிள்ளைக்கு என்ன ஆச்சுதோ'' பூரணம் விம்மினாள்.

மூத்த மகள் வனிதாவிற்கு இருபத்திஇரண்டு வயதாகிறது. அடுத்தது குமார். அவனும் இரு

பதாவது வயதில் கால் வைத்து விட்டான். தொடர்ந்து ஒன்றன் பின் ஒன்ருக ஆறு பெண்பிள்ளை கள். வனிதாவிற்கு எண்பதினு யிரம் சீதனம் கேட்கிருர்கள். காசாக நாற்பதினுயிரம் மிகுதி நகை நட்டென்று. மாப்பிள்ளை நல்ல சீவல் தொழிலாளிதான் இருந்தாலும் முதல் பிள்ளைக்கு இப்படிக் கொடுத்து விட்டு மிகுதி ஆறு பெண்பிள்ளைகளையும் கடலிலா தள்ளுவது? குமாருடைய படிப்பும் சரியாக முடியவில்லை. அவன் படித்து முன்னுக்கு வந்து விட்டால்சின்னஞ்சிறுசுகளை எண்டாலும் பார்ப்பான். அந்த நம்பிக்கை கந்தப்புவிற்கு உண்டு.

''போன கிழமை நடந்த பிரச்சினையைவிட நேற்று மோச மாமப்பா நிமிசத்துக்கொரு செல்லடியாம். சுந்தரம் சொன்னுன். தான் தப்பினது ஒரு மயிரிழையாம் அங்கினையிக்கை எங்கயோ கழிவுதண்ணி பாயிற வாய்க்கால் ஒண்டுக்கை அரை மணித்தியாலமாய் கிடந்தவனும். ரவுனில ஒரு பிரச்சினைவாற நேரத்தில எத்தனை சனங்கள் அநியாயமாய்ச் சாகுதுகள். நேற்றும் நாலைஞ்சு பேர் செத்த தெண்டு கதை.

''சும்மா ஊர்சனங்கள் நூற்றெட்டைக் கதைக்குங்கள். ஏதோ தாங்கள் போய் பார்த்து வந்த மாதிரி நீ எல்லுப் போல தேத்தண்ணி கொண்டா நான் முகம் கழுவிப் போட்டு வாறன். நேரத்திற்கு சீவிப்போட்டு வந்து ஏதாவது ஒரு வழிக்குப் போவம்

அடுக்களைக்குப் போன பூரணம் போன வேகத்தில் ஓடி வருகிருள் கந்தப்புவிற்கு விளங்கி விட்டது. அயல் வீட்டு நாய்களெல்லாம் ஆலோலம் பாடக் கேட்ட பூரணம் அதைப்பற்றி கூறத்தான் வருகிருரென்று ''என்னப்பா நாய்களெல்லாம் அகோரமாய்க் குலைக்குதுகள் ஆற்றயேன் சத்தம் சந்தடியையும் காணும். எங்கட நாயும் ரேட்டைப் பாத்துத்தானப்பா குலைக்குது. என்ன இடியேறு இன்றைக்கும்...... சன்னதியானே என்ரை பிள்ளையை எப்படிப்பாக்கப் போறனே! கடவுளே எத்தினைக் கெண்டுதான் இப்படி ஆக்கினைப் படுகிறது. நாங்களும் இண்டைக்கு வெளிக்கிட முடியாது போல கிடக்கு. எப்பிடி என்ரை பிள்ளையை தேடிப் போக முடியும்?'' பூரணத்தின் பிலாக்கணம் நாய்களின் நாதக் கச்சேரியோடு சேர்ந்தொலிக்கிறது. கந்தப்புவிற்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

''சும்மா அழாதை பூரணம் அழுது பிள்ளைகளின்ரை மனதைக் குழப்பாதை' அவனுக்கு ஒன்றும் ஆகியிருக்காது. பிள்ளை சிறிய தகப்பன் வீட்டை பத்திரமாக இருப்பானப்பா, நாங்கள் போகச் சுணங்கினுலும் சில சமயம் அவன் இப்ப வந்திடுவான். கந்தப்பு சொல்லிமுடிக்கு முன். முற்

றத்தில் நின்ற நாய் ஊளையிட்டுக்கொண்டே தெருவை நோக்கி ஓடுகிறது. அழுகையை அடக்கிக் கொண்டாள் பூரணம்

கந்தப்புவிற்கு விசயம் விளங்கி விட்டது இது கந்தப்புவிற்கு நான்காவது முறை. கடந்த மூன்று முறையும் அவர்பட்ட அவலங்கள் கொஞ்ச நஞ்சமில்லை! ஐம்பது வயதென்றும் பார்க்க மாட்டார்கள், கரடு முரடு நிறைந்த பாதைகளிலும் ஓடித்தான் போக வேண்டும் வெயில் பார்க்க முடியுமா? இன்றும் அதே கதிதான் நெருங்கிக் கொண்டிருக்கிறது. வெந்த புண்ணில் வேல் அல்லவா பாய்கிறது. எப்படியாவது குமாரை தேடப் போக வேண்டுமே மனைவிக்கு ஆறுதல் சொன்ன கந்தப்புவின் மனம் எங்கெங்கோ எல்லாம் செல்கிறது. ஆனால் எப்படி போக முடியும் சுழற்சி முறையில் கந்தப்புவின் மனம் ஓடிக் கொண்டிருந்தது.

''ஐயா ஐயா வேலியாலை எட்டிபார்த்த அம்மா ஓடிவாறு எனக்கு பயமாய்க்கிடக்கு நான்காவது மகள் நந்தா அழுகை பாதி வார்த்தை பாதியாக தந்தை அருகில் ஓடிவந்து சொல்கிறாள்

பூரணம் சொல்லாமாலே நிலைமையை உணர்ந்த கந்தப்பு ''இப்ப ஏன் பூரணம் நீ பதகளிக்கிறாய் பேசாமல் உள்ளை வந்திரு. நடக்கிறது நடக்கும் எல்லாம் ஆண்டவன் செயல்தான்.

''ஆண்டவனும் மண்ணாங்கட்டியும் அங்க றோட்டில அவை தானே நிக்கினம். கந்தசாமியை பிடிச்சு ஏதோ உறுட்டி உறுட்டிக் கேக்கினம் மிச்சப்பேர் எங்கட பட்லைப் பக்கமாய் வருகினமெனை

பூரணத்தின் கண்களில் இருந்து கண்ணீர் ஆறாகஓடுகிறது இதற்கு முன்பு இப்படி நடந்த நேரங்களில் பூரணம் இவ்வாறு கண் கலங்கியதில்லை. ஆனால் இன்று மட்டும் ஏன் இப்படி? எப்படித் தான் அவளால் கலங்காது இருக்க முடியும். ஒரேயொரு ஆண்பிள்ளை குமாருக்கு என்ன நடந்ததென்று தெரியவில்லை. இரவு பூராவும் நித்திரை இன்றி எப்போது விடியும் பிள்ளையைத் தேடிச் சென்று அவனை அணைத்துக் கொள்வேன் என அவலப் பட்டுக் கொண்டிருந்த உள்ளத்திற்கு இப்படியொரு நிலை அதிகாலையில் ஏற்பட்டதால் அந்தப் பேதைப் பெண்ணால் எப்படித் தான் தாங்கிக் கொள்ள முடியும்'

படலையென்று ஒன்று இருக்கே இதுகூட இவர்களிற்கு தெரியாதா? வேலியைப் வெட்டிப் பிரித்துக் கொண்டு உள்ளே வந்தவர்கள் கந்தப்புவை வரும் படி சைகை காட்டுகிறார்கள் விரக்தி அடைந்த பூரணம் சிலையாக நிற்கிறாள் மகள் வனிதா

ான்று
டும்
களா
ப்படி
தியா
க்குவ

டற்பத்
போதி
முறை
ல் லை
இக்
நவின
கவும்
ாரால்

தற்கு எதிராக உள்ளது. ஆனுல் யாருடைய நீதி —மனிதனுடையதா அல்லது கடவுளுடையதா

நன்றி: **விழித்தெழு.**

---

தற்பொழுது அயல் வடிசாலைகளின் செறிவு குறைந்த மது சாரத்தையும் (லோவைன்) பெற்று சுத்திகரிக்கபட்ட சாராயமாக்கியும் கொடுக்கப்படுகிறது அத்துடன் வெளியிலுள்ள சாலைகளின் (லோவைனையும்) சாராயமாக வடித்துக் கொடுப்பதற்கும் தம்மிடம் போதிய வசதிகள் இருப்பதாகவும் தெரிவித்தார்


**நல்வாழ்த்துக்கள்**

...........

...........

**ரங்கள்** ...........

**யாவுக்கும்**

**றிண்ட்டேர்ஸ்**

**ர் குறுக்கு வீதி,**

**யாழ்ப்பாணம்.**




தந்தையை பரிதாப
பார்க்கிருள். பற்றிய
சுறுட்டையும் தீப்பெட்டி
எடுத்த கந்தப்பு சும்மா
குழருமல் இரு பு
நாளெதோ அவர்களை
கீட்டு வரமுடியும் என்ருள்
டுவன் வந்தாவது ஆக
யதை பார்த்துக் கொள்
இப்போது எதைச் செ
தான் என்ன இவர்கள்
பார்களா? நா தளதளக்க
கந்தப்பு அவர்களுடன்
விட்டார்.

அந்தக் கூட்டத்தில் வ
கள் கொஞ்சம் கூட இ
அற்றவர்கள். ஏனெனில்
ருக்கு கிடைத்தது
விற்கும் கிடைக்கத் த
இல்லை இளைஞர்களும் வயே
களுமாக ஏறத்தாழ ஐம்ப
வரும். அவர்களுடன்
வும் ஒருவராக தனது
சுமையுடன் போய்க் கொ
ருக்கிருர் ஒவ்வொரு வீட்
லையிலும் சற்று நேரம்
வேண்டி வரும். இந்த
தில் சற்று ஆறுதல்.
நேரத்தில் அங்கிருந்து ஓ
இளைஞர்கள் இவர்கள்
வேகத்தைப் பார்த்து
நிற்கும் சில இளைஞர்கள்
நிலை மறந்து சிரித்துக்
வார்கள். கந்தப்புவைப்
ரேருக்கு வேதனைதான்.

இந்த வேதனைகுள்ளேயு
தப்புவிற்கு ஒரு ஆறுதல்

வ்வளவு நேரமும் மகன்
படியால் அவனிற்கு ஏதோ
நேர்ந்து விட்டது என
புவின் மனம் அடித்துச்
பியது தனியாகபோன பூர
ப்படி எங்கு சென்றுளோ
க்கு ஏதும் நேர்ந்திருந்தால்
இரு மடங்காகி விட்டது.
டி அமைதியாக நின்ற கந்
ணற்றடிக்கு சென்று மேல்
ழுவி விட்டு அந்த வெறும்
க்கு வெறும் நீரையே
நிறையக் குடித்துக் கொள்

னிதா கொடுத்த வேட்டி
வண்டி கட்டிக் கொண்ட
அவள் கொடுத்த ஐம்பது
வயும் வேண்டி வேட்டித்
ல் முடிந்துகொள்கிறூர்.
வைப்புச் செப்புகளிற்கு
ப்பு வனிதாதான் கள்ளிற்
சம்பளத்தை தவறணையில்
எடுக்கும் போதெல்
பொத்தியபடி வனிதாவி
ாண்டு வந்து கொடுத்து
ர். அவ்வப் போது செல
று ஐந்தோ பத்தோ
ரிந்து மகள் சொடுப்
வாங்கிக் கொள்வார்
கிடை பூரணத்தின்
கவனிப் பொன்று கந்தப்
கிடைத்துக் கொள்ளும்.
மாக சம்பளம் எடுக்கும்
ில் தவருது நெஞ்சுரஞ்
ரிசனெடி பிள்ளை ஏதும்
விடு இண்டைக்கு கருப்
அந்தச் சீமான் தான்
கொண்டு வந்தது
அலுப்பாய் இருக்கும்.
காப்போத்தலுக்கு குடு

## ஊர்வலம்.

எஸ்.வி.மூர்த்தி
தெ.ப.பொ.கூ.சங்கம்
கொடிகாமம்.

இரவு முழுவதும் நித்திரை இன்றி பூரணத்தின் மனம் அல்லற் பட்டுக்கொண்டிருந்தது. எப்போது விடியும் மகன் குமாரை எங்கே தேடுவது. அவனிற்கு என்னதான் ஆச்சுதோ? திண்ணைக் குத்தில் சார்ந்து கொண்டிருந்த பூரணத்தின் மனம் ஒரு நிலையில்லாது தவித்துக் கொண்டிருந்தது.

விடியற்புறக் கோழி கூவியதும் அதுவரை குறட்டை விட்டுக் கொண்டிருந்த கந்தப்பு யாரோ தட்டியெழுப்பியதைப் போல துடித்துப் பதைத்து எழும்புகின்றூர். நாளொன்றுக்கு பத்துப் பனைக்கு மேல் ஏறி இறங்கும் கந்தப்பு அயர்ந்து தூங்கினுல் ஆச்சரியம் இல்லைத்தான். ஐம்பது வயது சென்றுலும் கந்தப்புவின் விடாமுயற்சி சிறு வயதில் இருந்தே கஷ்ரப்பட்டவர் கந்தப்பு, தனது இருபதாவது வயதிலே பூரணத்தைக் கைப்பிடித்தார். இப்போது எட்டுப் பிள்ளைகளிற்கு தந்தையாக இருந்தும்

குடும்
வத்தே
ரூர்.

"இ
பனை
சீவிப்
சொ
சாஞ்
கொ
ருள்.
ஒரு
குமா
ணத்
கொ
எங்கே
கிறது
டறி
தாமே
ரியூப்
டுட்டு
போ
சினை
போ
அந்த
டம்
தவல்

''
தான்
நேர
லில்
வந்தி
என்ன
தோ"

மூ
இருப
அடுத்

பிள்ளை. அந்தாள் குடிச்சுட்டு வந்து தான் ஏதும் கரைச்சல் தாறதே. பெண்டில் பிள்ளைய ளுக்கு உந்த வேலப்பன் செய்யிற அநியாயத்தையும் பாக்கிறி யள் தானே. இரண்டே இரண்டு பனை சீவுறது அதுக்கு மேல ஏற அவற்றை பலகை நெஞ்சுக்கு பலம் காணுதாக்கும் சீவுறது சரி இரண்டு பனைக் கள்ளையாவது ஒழுங்கா கொடுக்கிறானே கோப் பிரசனுக்கு தவறணைக்கு போக முன்னமே இரண்டு மூன்று பாஞ் சடும் சரி அங்கதான் கொண்டு போறதை முழுவதுமாக குடுத்து பதிஞ்சு போட்டு வாறானே இரண் டொரு மணி வரைக்கும் நிண்டு வம்பழக்கிறது கொண்டு போன தையும் குடிக்கிறது மிஞ்சிற ஒண்டு இரண்டைத்தான் பதியி றது. எட அதுதான் போகு தென்று பார்த்தால் அந்தக் கொஞ்ச நஞ்ச சம்பளத்தை எண் டாலும் எடுத்து வீட்டை கொண்டு போவனே எண் டைக்கு சம்பளமோ அண் டைக்கு மூக்கு முட்ட கசிப்பை குடிக்கிறது. அந்த உசாரில வந்து டெண்டாட்டியில கறுட்டி பழகி றது. பாவம் அவளும் ஒரு வல்ல சீவன் இதுகளை எல்லாம் தாங்கிக் கொண்டு இருக்கிறாள் ம் ... இதுகளை பாக்க யுக்க எங்க ளுக்கு என்ன குறைமேளை கொப் பர் எண்டைக்காவது எங்களை இப்படி கரைச்சல் படுத்தி இருப் பரே. எல்லாம் பெட்டைக் குஞ்சுகளாய் இருந்தாலும் ஆசைக்கொரு ஆண் குஞ்சை யும் ஆண்டவன் தந்துதானே இருக்கிறான் இவ்வாறாக சொல் லும் பூரணம் தன் குடும்பத்தில் அன்பை வினக்க தவறவில்லை.

தாயின் அன்பான கட்ட ளையை ஏற்ற மகள் வனிதா கொடுக்கும் பணத்தை வாங்கும் கந்தப்புவிற்கு அது ஒரு வகை பேரின்பம் தான் எந்த வகையி லும் மனைவி பிள்ளைகளிற்கு துரோகம் செய்யவில்லை என் கின்ற பெருமை அது கந்தப்பு வின் உள்ளத்தில் பூரணத்தால் விதைக்கப்பட்ட அன்பு என்னும் விதை வேர் விட்டு படர்ந்து இருக்கும் போது இக்குடும்பத்தில் அன்புக்கு பஞ்சம் இருக்குமா?

நான் வரச் சுணங்கினாலும் கேற்றை வடிவாய் பூட்டிப் போட்டு இருங்கோ மோனை தியா கண்ணையை துணைக்கு வரச் சொன்னான். அவரும் வருவார். பத்திரமாய் இருங்கோ. என்ன ஆச்சுதோ குமாரின் நிலைதான் என்னவோ ஏதுக்கும் நான் போட்டு வாறன் மோனை அழுத கண்களோடு தந்தைக்கு பின்னால் படலை வரைக்கும் வந்து விட் டாள் வனிதா: வனிதா தான் படலை வரைக்கும் வந்தாளோ தந்தையை வழியனுப்பவா இல்லைத் தனது ஒரேயொரு தம்பியின் ஏழு பெண் பிள்ளைக ளிற்கு ஓர் ஆண் பிள்ளையான அந்தத் தம்பியின் அந்த அரு மைத் தம்பியின் உயிரற்ற உடலை வரவேற்கவா?

இருவரும் படலையை திறந்து கொண்டு வரவும் அந்த வெளி அழகு கொண்ட சவவண்டி வந்து நிற்கவும் சரியாக இருந்தது.

# வன்னி மாவட்டத்தில்
# வளர்ந்து வரும் சங்கம்

## துணுக்காய் - பாண்டியன்குளம் தெ. ப. பொ. கூ. சங்கம் பற்றி ஓர் கண்ணோட்டம்.

—நேசன்—

சீவல் தொழிலாளர்களின் சமூக பொருளாதார கலை கலாச்சார வளர்ச்சியை உருவாக்கும் நோக்கமாக 1972-ம் ஆண்டு வடபகுதியில் உருவான தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக்கூட்டுறவுச் சங்கங்கள் இன்று இலங்கையின்வடபகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் விரிவுபடுத்தப் பட்டதன் விளைவாக வடகிழக்கு மாகாணத்தில் மொத்தமாக 35 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு இயங்கிவருகின்றனஇச்சங்கங்கள் ஓர் உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கமாக திகழ்வதுடன் இப் பிரதேசத்தின் முக்கிய பொருளாதார வளத்தைப் பயன்படுத்தும் நிறுவனமாக காட்சிதருவதையும் நாம்அறிவோம்.இவ்வாறுஇயங்கி வரும் சங்கங்களில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சங்கங்களுள் ஒரு சங்கமான துணுக்காய் பாண்டியன்குளம் தெங்குபனம் பொருள் கூட்டுறவுச் சங்கத்தின் செயல்பாடுகள் பற்றி அறிந்து கொள்ளுவோம்.

துணுக்காய் — பாண்டியன் குளம் தெ ப பொ.கூ. சங்கம் 1983-ம் ஆண்டு பதிவுசெய்யப் பட்டிருப்பினும் 198 -ம் ஆண்டிலிருந்தே சிறந்தமுறையில் செயல் படத்தொடங்கியமைகுறிப்பிடத் தக்கது 252 அங்கத்தவரைக் கொண்ட இச்சங்கத்தில் இம் மாதம் 90 அங்கத்தவரை இயங்கி வருகின்றனர். நிரந்தர ஊழியராக 15 பெயரையும் தற்காலிக ஊழியராக 10 பெயரையும் கொண்டு இயங்கிவரும் சிறிய சங்கமாக இருப்பினும் இதன் செயற்பாடுகள் விரிவுபடுத்தப் பட்டுள்ளமை ஒரு சிறப் ப ம் ச ம் எனலாம்'.

தற்போது கள் உற்பத்தி விற்பனையுடன், செறிவுகுறைந்த மதுசாரஉற்பத்தியையும்மேற்கொண்டுஊற்றுக்கள் முறைக்கு முற்றுப் புள்ளிவைத்து இவ்உற்பத்தி விற்பனைகளை திட்டமிட்டு செயற்படுத்தி பெறப்படும் இலாபத்தினை பேணிக்காத்து தமதுவிற்பனைநிலையங்கள் பதினொன்றையும் சொந்தமான தலா 8 பரப்பு விஸ்தீரணமான காணிகளில் அமைத்ததுடன் 7 கிளைகளை தலா ரூ 5000/- பெறுமதியான கட்டிடங்களாக அமைத்துள்ளது மேலும் அப்பிர

தேசமக்களின்சேவைகளை பூர்த்தி 'செய்யும் வகையில் இரண்டு கற்பகம்'' விற்பனை நிலையங்களை நடாத்திவருகின்றது இந் நிலையங்களில் பனம் பொருள் உற்பத்திப் பொருட்களுடன் ஏனைய பொருட்களும் விற்பனை யாவதை அவதானிக்க முடிந்தது. இச் சேவைக்காக ரூபா 100000/- முதலிடப்பட்டுள்ள தென அறியத்தரப்பட்டது.

மேற்படி விற்பனை நிலையத்தில் விற்கப்படும் பனம் உற்பத்திப் பொருட்கள் இச்சங்கத்தால் பனை அபிவிருத்தி சபையின் உதவியுடன் நடாத்தப்படும் அப் பகுதி மகளிர் குழுக்களால் உற்த்தி செய்யப்படுவதையும் காண முடிந்தது. இதன் மூலம் அப் பகுதி மகளிர்க்கு பனம்பொருள் உற்பத்தி பயிற்சியளிப்பதுடன் ஊதியமும் பெறும் வழிகள் செய்யப்பட்டுள்ளது.

சமூக மேம்பாட்டை நோக்காக கொண்ட இச்சங்கம் அப்ப குதியில் படித்து வேலையற்றுள்ள மகளிரின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு சங்கத்தின் சார்பில்இரண்டு தையல் இயந்திரங்கள் வழங்கியதுடன் ஓர் தையல் ஆசிரியைக்கு சம்பளம் வழங்கி பல யுவதிகளுக்கு இலவசமாகத் தையற் பயிற்சியளித்து வருகின்றது.


இம்முயற்சியுடன் சங்கத்தை உள்ளடக்கிய எல்லைப் பிரதேசத்தில் பதின்மூன்று பாலர் பாடசாலைகளை நடாத்திவருவதுடன் இப் பாடசாலைகளுக்கு பதினைந்து ஆசிரியர்களை நியமித்து மாதாந்தம் தலாரூ300/- சம்பளமாக வழங்கி சேவையாற்றி வருகின்றனர் இப் பாடசாலைகளில் ரூ 6500/-பெறுமதியான உபகரணங்களையும் வழங்கியுள்ளது.

தமக்கெனச் சொந்தமாக ரூ 250000 பெறுமதியான வாகனத்தை கொண்டுள்ள சங்கம் 25 ஏக்கர் காட்டினை வெட்டி 10 ஏக்கரில் பனம் விதை நாட்டியதுடன் பனை அபிவிருத்தி சபையால் வழங்கிய 150 பனை முளைகளையும் நாட்டியுள்ளது. இக்காணியில் ஊடுபயிற் செய்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தமையும் ஏனைய 15 ஏக்கர் வெட்டிய நிலையிலும் காணப்பட்டது. இதிலும்பனம் விதைகளை நாட்டி எதிர் காலத்தில் இச்சங்கத்தின் சொந்தப் பனம் பண்ணை ஒன்றை உருவாக்கத் திட்டமிட்டுள்ளதை மகிழ்வுடன் அறியத்தந்தனர்.

1990 ஆண்டில் தமது அபிருத்திப் பணியாக, தமது சங்கப் பிரதேசத்தில் பனைவெல்ல உற்பத்தியினை மேற்கொள்ள விருப்பதுடன்முல்லைத்தீவுமாவட்ட ஏனைய சங்கங்களுடன் இணைந்து ஒரு பனை வடிசாலையை அமைத்து இயக்குதற்கு அதன் பங்குதாரர்

செயற்படவுள்ளதாக தெரியப் படுத்தினர்.

இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் வன்னிமாவட்டத்தில் ஓர் வளர்ந்துள்ள சங்கமாக காணப்படும் இச்சங்கம் ஏனைய சங்கங்களுக்கு ஒரு முன்மாதிரியாக உள்ளமையை கண்டு இச்சங்கநிர்வகத்தையும் அங்கத்தவரையும் டாராட்டாமல் இருக்க முடியாது. தெங்கு பனம் பொகூ. சங்கங்கள் உருவாகிய நோக்கத்தை அடைவதற்குப் பல தடைகள் இருந்தபோதிலும் இத்தடைகள் நீங்கும் பச்சத்தில் துணுக்காய்—பாண்டியன்குள சங்கம் போல ஏனைய முல்லைத்தீவு மாவட்ட சங்கங்களும் வளர்ச்சியடைந்து வட கிழக்கு மாகாணத்தின் பாரிய பொருளதார நிறுவனமாக காட்சி தருவதற்கு சங்கங்களின் பங்களிப்பை தரவேண்டுமென்பதே இச்சங்கங்களின் அங்கத்தவரதும், ஊழியரதும் அவர்கள் சார்ந்த சமூகத்தினதும் பேரவா என்பதில் ஐயம் இல்லை. இக்களவை நனவாக்க இந்நிறுவனம் சார்ந்த அனைவரினது ஒத்துழைப்பும் நலன் விரும்பிகளின் பேராதரவும் இன்றியமையாதவையாகும்.

"உழவன் மூலமாகவே நமக்கு விமோசனம் ஏற்படவேண்டும். எங்கள் கிராமங்களின் புனர் நிர்மான வேலை விவசாயத்தில் தான் அடங்கி உள்ளது எனவே, உழவனை உயர்த்தப்பாடுபடுவது எவ்வளவோ மேலானது."

— காந்தியடிகள்.

**"மில்க்வைற் சலவைப் பவுடர்"**

துரித சலவைக்கும் தூய வெண்மைக்கும் உற்ற நண்பன் போல் கை கொடுத்து உதவுகிறது.

**வெற்றுப் பைக்கற்றுகளுக்குப் பரிசில்கள் உண்டு.**

**மில்க்வைற், யாழ்ப்பாணம்.**

தொடர் நவீனம்

# உண்மையில்லாத உறவுகள்

அத்தியாயம் → 11

கே. வி. என்.

''ஆலிலே பூவும் காயும் அதனுலே பழமுமாகில் சாலவே பட்சிகளால் தன் குடியென்றே வந்திடுமே, அன்னம் இந்தப் பாடல் தான் எனக்கிப்ப ஞாபகத்துக்கு வருகிறது. அந்த மாதிரித்தான் உந்தச் சாதியும். என்ரை பண பவுசும் தான் உவங்களை என்ரை படலையைத்திறக்க வைச்சது இந்த முத்தையனை முந்தி ஒரு மனுஷனுகக் கணிச்சவங்களே? உவங்கள். ஏன் உனக்குத் தெரியும் தானே! பாத்திர மறிஞ்சு பிச்சை போடு கோத்திரமறிஞ்சு பெண் குடு என்று சும்மாவா சொல்லி வைச்சாங்கள். உவங்களுக்கு குடுக்கின்ற பெண்ணையும் பொருளையும் எங்கையாவது பாண் கிணற்றிலை கொண்டு போய் போடலாம். தெரியும் தானே உவங்கடை பரம்பரையைப் பற்றி. பொன்னுக்கோனும் உவங்களும் அவளொருத்தியின்ரை ஏழு கிணற்றடி சொத்தெல்லாத்தையும் வித்துச்சுட்டு ஆனந்தாணித்தனம் பண்ணின கூட்டமெல்லே

''ஒன்டு இரண்டு அப்படியெண்டாப் போலை எல்லாம் அப்பிடியே? நல்லாய் இருக்கிறதுகளோட தான் நல்லாய் இருக்கிறதுகள் சேரப்பாக்குங்கள். அதுக்குப் போய் எல்லாரையும் ஏக சோட்டுக்கு கதைக்கலாமே

''அன்னம் நீ ஆயிரத்தைத் தான் சொல்லன், எனக்கென்னவோ உந்தப் பக்கம் தலை வைச்சுப்படுக்கவே பிடிக்கவில்லை. கந்தையா ஏழைதான். அவனிட்டைத் தான் மனிதப்பண்பு கிடக்கு. ஏழை யெண்டாலும் இருதயமுள்ள ஒரு உண்மையான மனிதன் அவன் போட்ட சாணைக் கூறைக்கு மறு கூறை எடுக்க மாட்டான். . . . . . ,,

''உதாரெண்டு பார், கேற்றடியிலை ஆரோ செருமிக் கேட்குது.,

''வேறை ஆர்? உங்கடை தோழன் தான்''

''என்ன அன்னம்! தோழன் தோழி என்றெல்லாம் பழைய கால இராசா இராணி கூத்திலை வாற மாதிரிக் கதைக்கிருய்; எங்கை உவன் பாவி வரவில்லையோ?

''வா வா, நூறு வயது. இப்பத்தான் உன்னைப் பற்றிக் கதைச்சுக்கொண்டிருக்கிறம் அது சரி கந்தையா, எப்ப இருந்து இந்த முத்தையனுக்கு இரண்டு நாக்கு முளைச்சது என்று நினைக்கத் துவங்கினனி? நான் உழைச்சுப் பிழைச்ச இந்தச் செல்வாக்கெல்லாம் இன்டைக்கே என்னை விட்டுப்போய்விட்டாலும் பேசின பேச்சுக்கு இந்த முத்தையன் ஒரு போதும் மறுதலிக்கமாட்டான். ஒரு வேளை நீயும் என்ர காசையும் சொத்தையும் கண்டு தான் சம்பந்தம் வைக்க ஆசை படுகிறியோ என்னவோ, அப்படியென்றால் இப்பவே சொல்லிப் போடு. பணம் வந்தால் குணத்திலும் கோளாறு ஏற்படுமென்று சொல்லுறவைதான் ஆனால் இந்த முத்தையன் அப்படிப்பட்டவனல்ல. நடந்ததை நினைச்சால்த்தான் படைச்சவன் கஞ்சி தருவான். என்று சொல்லுங்கள் நீயும் என்னைப்பிழையாய்க் கணிச்சிட்டாய். சரி நீ ஒண்டும் மாறில்லைத்தானே உன்ரை மகனை என்ரை மருமகனாக அனுப்புறதுக்கு? அண்டைக்கு சாணைக் கூறை போட்டியே ஞாபகமில்லையோ? இப்ப என்ன சொல்லுகிறாய்? ''

''சொல்லுறதுக்கு என்ன இருக்கு முத்தையா! நான் மட்டும் பேச்சு மாறிவிடுவேன் எண்டு யோசிக்கிறாயோ? ஆனால் இதாலை ஒருத்தருக்கொருத்தர் மனம் நோகக் கூடாதெண்டதுக்காகத் தான் வாய் வைக்க யோசிச்சேன். எனக்காக, இந்தப் பிச்சைக்கார முத்தையனுக்கா உனக்கு வந்த உயர்ந்த சம்பந்தங்களை உதறி விடக்கூடாதே என்பதற்காகத்தான் யோசித்தேன். நீ என்னடாவென்றால்.

''கந்தையா! எது உயர்ந்தது எது தாழ்ந்தது என்பதெல்லாம் நான் நன்றாக அறிவேன். உந்த விசர்க்கதையெல்லாத்தையும் விட்டிட்டு நாளைப் பார்த்து எல்லாத்துக்கும் ஏற்பாடு செய்' ஓ! சீதன பாதனம் பேசக்கேட்கப் போறியோ? சரி கேட்கிறதெல்லாத்தையும் இப்பவே கேட்டுகொள்

எனக்கென்னத்துக்கு முத்தையா உந்த சொத்துப்பத்தை· எனக்எண்டு உன்னைவிட மேலான சொத்துமொண்டு எனக்கு வேணுமா? நீயும் உன் குடும்ப உறவுமே எனக்கு. எல்லாவற்றையும் விட மேலான சொத்து.

(தொடரும்)

---

## உன் உடலுக்கு விளக்கு

உன் கண்தான் உன் உடலுக்கு விளக்கு; உன் கண் தெளிவாயிருந்தால் உன் உடல் முழுவதும் ஒளியுள்ளதாய் இருக்கும். உன் கண் கெட்டிருந்தால் உன் உடல் முழுவதும் இருண்டிருக்கும். ஆகவே உன்னுள் இருக்கும் ஒளியே இருளாயிருந்தால், இருள் என்னவாயிருக்கும்!

**யேசு பெருமான்**
(மலைப்பொழிவு)

# நிகழ்வும் நிஜமும்

— கற்பகன் —

## "தாலமும் தாளமும்"

நந்தீஸ்வரர் மிருதங்க இசைக்க நாதன் ஆட ஈரேழு பதினுன்கு உலகும் இதைக் கண்டு ரசிக்க ஆஹா, என்னே இனிய என்னே இன்பம். ஆம்!! இன்றுவரை இந்த மிருதங்க இசை நாதத்தில் நாம் ஆடியும் பாடியும் இன்புற்றே வருகின்றோம். இந்த அற்புத வாத்தியத்தின் இனிய சுருதி, இசை வெளிப்பாட்டிற்கு பனை ஓலைச்சட்டங்கள் எந்தளவிற்கு பயன்படுத்தப்படுகிறது என்பதை விளக்குகின்றது இக்கட்டுரை.

பல்லாயிரம் ஆண்டுகளாகப் 'பனை' எம்மோடு, எமது வாழ்வோடு இணைந்துள்ளது. பனை தமிழ்மக்களின் பாரம்பரியத்தை, கலை, கலாச்சாரத்தை உயர்த்தி உள்ளது, அம்மட்டும் அல்ல.

தமிழ் இனத்தின் பெருமையே 'பனை'யளவு உயர்ந்தது என்ற மூத்த புலவர்களின் பாரட்டுதல்கனையும் பெற்றுக்கொண்டு உள்ளது காலம்காலமாகத்'தால'மாகப் போற்றப்படும் இக்கரும்பனை 'தாள' த்திற்கும், உரியதாக விளங்குகின்றது, இச் செய்தி'கற்பகம்' வாசகர்களுக்குப் 'பதநீர் போன்று இனிக்கும், முக்கலைகளால் தமிழ் சிறப்படைந்தது. இம் முத்தமிழையும் வளர்த்தது எப்பனை அன்றோ

பனைஓலை ஏடுகள், சுவடிகள் தமிழ் அழியாது பாதுகாத்தன. இலக்கித்தில் பனையும் பெரும் இடம் பிடித்துள்ளது. திருவள்ளுவரும் பனையை விட்டு வைக்கவில்லை

உங்களுக்கு வியப்பூட்டும்சேதி ஒன்றைத் தருவதற்கே கற்பகன்' இவற்றைச் இங்கு சொல்ல வேண்டி வந்தது.

'தாலம்' , ' தாளம் சேர்ப்பதுபற்றி ஏற்கனவே இங்கு குறிப்பிட்டேன் அல்லவா? இசைக்கச்சேரிகள், சினிமப்பாடல்கள் எல்லாவற்றிலும் முக்கிய வாத்தியக் கருவியாக இடம் பெறும் மிருதங்கநாதத்தைச் சுருதி. சேரத்தருவது பனை ஓலைச்சட்டங்கள் என்பது ஆச்சரியப் படவைக்கும்

இதனைக் கற்பகம் சொல்லவில்லை. ஈழத்தின் பிரபல மிருதங்கமேதை கலைஞர்திரு. ரி, இரத்தினமே சொல்லியுள்ளார், அவர்

# சங்கச் செய்திகள்

## பனை விழா

தைப்பொங்கல் திருநாளில் பருத்தித்துறை தெங்கு பனம் பொருட் கூட்டுறவுச் சங்கம், பனைக்கு விழாவெடுத்து நன்றி செலுத்தும் வைபவத்தை பெரு விழாவாக கொண்டாடுகிறது.

வருடாவருடம் இடம் பெற்றுவரும் இப்பனை விழா வைபவம் இம்முறை வெகு விமரிசையாக கொண்டாட இருப்பதாக சங்கத் தலைவர் திரு கி. சிவப்பிரகாசம் அவர்கள் கற்பகத்திடம்தெரிவித்தார்

## காரியாலயம் இடமாற்றம்.

கட்டை வேலி— உடுப்பிட்டி தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச்சங்க காரியாலயம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. நாவலர் மடம் கலட்டி வீதிக்கு இடம் பெயர்ந்துள்ள மேற்படி சங்க புதிய காரியாலய முகவரி நாவலர்மடம், கலட்டிவீதி, கரவெட்டி என்பதாகும்.

---

(24-ம் பக்க தொடர்ச்சி)

இதனைச் சொன்னது மட்டும் அல்ல பனை ஓலைச்சட்டங்கள் எவ்வாறு மிருதங்கநாதத்தைச் சுருதி கூட்டிக் குறைக்கப்பயன்படுத்தப் படுகின்றது என்பதைச் செய்தும் காட்டி உள்ளார்.

இந்த, அருமையான காட்சியை 'ரூபவாஹினி, தொலைக்காட்சியில் கண்டு 'கற்பகன்' அடைந்த மகிழ்ச்சிக்கு அளவு ஏது?

* * *

# புதிய நிர்வாக சபை.

சுன்னுகம் — அளவெட்டி — பல்லாகம் தெங்குபனம் பொருள் கூட்டுறவுச் சங்க வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபை தெரிவும் 30-10-89ல் நடைபெற்றது புதிய தலைவராக திரு க. மெய்யழகனும் உபதலைவராக திரு. சு. சதாசிவமும் செயலாளராக திரு. க. குணசேகரமும் தெரிவு செய்யப்பட்டனர். ஏனைய நிர்வாகசபை உறுப்பினர்கள் திருவாளர்கள் சு. பொன்னுத்துரை தே மதுரநாயகம் நா. தேவராசா சி. சிவலிங்கநாதன் பா. பன்னீர்ச்செல்வம் செ. முருகேசு ஆகியோராவர்

கூட்டுறவுப் பெரியார்

அமரர் வீ. வீரசிங்கம் அவர்களது

# நினைவுச் சொற்பொழிவு.

## சிறந்த தேசியவாதியென பலரும் புகழாரம்.

கூட்டுறவுப் பெரியார் அமரர் வீ. வீரசிங்கம் அவர்களது இருபத்தைந்தாவது நினைவு தினம் 5-12-89ல் யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபையினுல் அனுஷ்டிக்கப்பட்டது.

அன்றையதினம் சிறும்பியடி ஒழுங்கையிலுள்ள மேற்படி சபையின் மண்டபத்தில் ஓர் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபையின் உபதலைவர் திரு. சி. வ. வைத்திலிங்கம் கூட்டத்திற்கு தலைமைவகித்து உரையாற்றுகையில் பெரியார் வீரசிங்கம் அவர்கள் கல்வி சமயம் கூட்டுறவு ஆகிய துறைகளில் சிறந்த சேவை ஆற்றினுர். கூட்டுறவுத்துறையில் அவர் செய்த சேவையினுல் வடபகுதி கூட்டுறவுத்துறை வளர்ச்சி பெற்றது. அகில இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனத்தின் முதலாவது தலைவராகவும் அவர் சிறப்புற பணியாற்றினுர்.

பெரியார்கள் மக்களுக்காக அளப்பரிய சேவைகளை செய்து மறைகின்றுர்கள். அவர்கள் விட்டுச் சென்ற பணிகளை நாம் தொடர்ந்து செய்வதற்கு முழுமனதோடு உறுதி செய்யும் தினம் என்பதே நினைவு தினங்களின் அடிப்படைக்கருத்தாகும். பெரியார் வீரசிங்கம் அவர்கள் தனது கூட்டுறவு அறிவையும் அனுபவங்களையும் திரட்டி கூட்டுறவுத் தத்துவம் என்ற ஆங்கில நூலை கூட்டுறவு உலகிற்கு அளித்துள்ளார் என்று கூறினுர்.

பண்டிதர் இ, திருநாவுக்கரசு பேசுகையில் கூட்டுறவு இயக்கத் திற்கு பெரியார் வீரசிங்கம் அவர்கள் ஆற்றிய அரும்பணியை இலங்கைக் கூட்டுறவாளர்கள் என்றும் மறக்கமாட்டார் கள் ''தக்கார் தகவிலார் என் பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்.'' என்ற குறளுக்கு இலக்கணமாக அவர் செய்த சேவையின் சிறப்புக்களை இன்று நாம் உணரக்கூடியதாகஇருக்கின் றது என்று கூறினர். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் கல்வி கூட்டுறவு ஆகியதுறைகளில் பலர் வீரசிங்கம் அவர்களது மாணவர் களாக இருந்து வளர்ச்சி பெற் ருர்கள். அவர் நாட்டிற்கு பயன் படக்கூடிய கூட்டுறவாளர்களை யும் கல்விமான்களையும் உருவாக் கினர், அவர் அமரத்துவமடைந்த பின் அவரது மாணவனுகிய முன்னுள் கூட்டுறவு சிரேஷ்ட உதவிஆணையாளர் திரு.இ. இராச ரத்தினம் வடபகுதி ஐக்கிய மேற் பார்வைச்சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். தனது குரு வகித்த தலைமைப்பதவியை அவர் சிறப்புற வகித்து கூட்டு றவாளர்கள் கூட்டுறவுச்சங்கங் களின் ஆதரவோடு பெரியார் வீரசிங்கத்தின் நினைவுச் சின்ன மாக வீரசிங்கம் மண்டபத்தைக் கட்டினுர் என்ருர்.

சோமசுந்தரப்புலவர், நீதிபதி நாகலிங்கம், வீ, வீரசிங்கம் இம் மூவரும் நவாலியில் தோன்றிய மும்மணிகள் என மேலும் பேசு கையில் அவர் குறிப்பிட்டார்

அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூட்டுறவுசங்கத்தலைவர் பண்டிதர் க. நாகலிங்கம் பேசு கையில் வீரசிங்கம் அவர்களது வாழ்க்கையை நோக்கும் போது அவர் ஒரு சிறந்த தேசியவாதி யாக வாழ்ந்தார் என்று நாம் கூறலாம்.

அவர் ஆற்றிய கூட்டுறவுச் சேவையில் அவர் காட்டிய முன் மாதிரியும் பலாபலன்களும் இன்று எமக்கு சிறந்த வழிகாட்டிகளாக இருக்கின்றன என்று குறிப்பிட் டார்.

யாழ்மாவட்ட மகளிர் குழுத் தலைவி திருமதி சகிதேவி கந் தையா பேசுகையில் பெரியார் வீரசிங்கம் சிறந்த ஒரு தேசிய வாதி என்று குறிப்பிட்டார். யாழ்ப்பாண மாவட்ட கூட்டுற வுச் சபைச் செயலாளர் திரு. சு, சிவசுப்பிரமணியம் நன்றி கூறி ஞர்.

---

சுவாமி
## சிவாநந்தரின் அருளுரை.

புகழ்ச்சியும் இகழ்ச்சியும் காற் றினில் அசைவுகள். அவைகளை தாண்டி அப்பாற் செல்.

# புதிய நிர்வாக சபை.

***பச்சிலைப்பள்ளி - பனை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்க நிர்வாக சபை உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.***

திரு. செ. தனபாலசிங்கம். *(தலைவர்)* திரு. சி. சின்னத்தம்பி *(உபதலைவர்)* திரு. இ. பரமு (செயலாளர்) நிர்வாக உறுப்பினர்கள்: திரு. ம. செல்லத்துரை, திரு, இ. அல்பேட், திரு. ந. நாகலிங்கம், திரு. வ. சின்னத்தம்பி, திரு. க. கனகரத்தினம்.

செம்பியன் பற்று மாமுனைக்கான தெரிவு இடம் பெறவில்லை.

★

## இரண்டாந் தடவைக் கொடுப்பனவு

*அரியாலை தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம் இரண்டாம் தடவைக் கொடுப்பனவாக ரூபா* ***108. 483/62*** *அங்கத்தவர்களுக்கு வழங்கியுள்ளது. இக் கொடுப்பனவு* ***1-2-83-ல்*** *இருந்து* ***31-12-89*** *வரையான காலப்பகுதிக்குள் கொள்வனவு செய்யப்பட்ட உற்பத்திப் பொருளின் இலாபப் பணமாகும். 138 அங்கத்தவர்களுக்கு மேல் தொழிற்படும். மேற்படி சங்கத்தினுல் முடமாவடி கிளை சங்கத்தை சேர்ந்த அங்கத்தவரும் சங்க நிர்வாகசபை உறுப்பினருமான திரு. சு. குகனேஸ்வரன் ஆகக் கூடுதல் இலாபப் பணத்தினைப் பெற்று சாதனையை நிலைநாட்டி உள்ளார்.*

*ஊழியர்களுக்கான ஊக்குவிப்பாக ரூபா* ***47,325,75*** *வழங்கி தைப்பொங்கல் பண்டிகையை குதூகலமாகக்கொண்டாட வைத்த சங்க நிர்வாகத்தை பணியாளர்கள் நன்றியுடன் பாராட்டவும் செய்தார்கள்.*

# பொங்கல் புது நாள்

# தரும் பொருள்

எஸ். கே. ஏ. ஆனந்தன்

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை -செய்வோம்-''
என்று மகாகவி பாரதியாரும்

"'தொழிலே வாழி நீ!
தொழிலே வாழி நீ!''

என பாரதிதாசனும் செய்யும் தொழிலை முதன்மைப்படுத்தி வாழ்த்தி வணங்குவதற்குரிய தெய்வநிலைக்கு உயர்த்தி கவி புனைந்துள்ளார்கள்.

நெல்லும் கரும்பும் மஞ்சளும் கனிகளும் விளைந்ததைக் கண்டு மகிழும் உழவரும்தொழிலாளரும் தொழில் திறனைக் கண்டு பூரிப்புற்றுச் சூரியனுக்கு நன்றிக்கடன் செலுத்தும் திருநாளே தைப் பொங்கல் தினம்.

இயற்கையின் நலன்கள், ஞாயிறு, மழை, ஒளி, வெப்பம், நிலம் யாவும் மக்கள் யாவர்க்கும் சொந்தம் என்பதனை தைப் பொங்கல் தினம் எடுத்துரைக்கின்றது. உழைப்போரே உயர்ந்தவர். உழைப்பே உயர்வு தரும். என்னும் வாழ்க்கைத் திறனை வெளிப்படுத்திக் காண்பித்து நிற்கும் தினமே இத்தினம்.

இதனாலன்றே "தைபிறந்தால் வழிபிறக்கும்" என்பது தமிழர்தம் மரபுவழி நம்பிக்கை ,இந்த நம்பிக்கைக்கு வழிபாடு நடாத்தும் விழாவாகவும் தைப் பொங்கல்— தை முதல்நாள் அமைகின்றது. தைப்பொங்கல் திருநாள் உழவர்கள் திருநாள் என்றும் தைப்பொங்கற் பண்டிகை தமிழர் பண்டிகை என்றும் சிறப்பாகக் கூறினாலும் உண்மையில் இப் பொங்கல் திருநாள் வழிபாடு இயற்கையின் பேணுதலுக்கு நன்றி செலுத்தும் நாளாகும். நன்றி கூறல், நன்றி செலுத்தல் நாகரிகமாகும். அதனையே தைப்பொங்கல் தினமாகப் பின்பற்றுகின்றோம்.

தமிழர் வாழ்வில் சிறப்பாக இந்துக்கள் மத்தியில் ஆண்டு முழுவதும் விரதங்களும் விழாக்களும் பண்டிகைகளும் நிரம்பியுள்ளன. விரதங்களும் விழாக்களும் பண்டிகைகளும் மக்களுக்குப் புதியநம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் உண்டாக்கவழிவகுக்கின்றவையே. மேலும் இவை அகத் தூய்மை புறத்தூய்மைகளோடு கலைச்சிறப்பும் வழிபாட்டு இறை உணர்வும் ஒருங்கே நிறையப் பெற்றவையாகும்.

உயிர்வாழ்வுக்கும் பயிர்த் தொழிலுக்கும் கைத்தொழிலுக்

கும் மழை, வெயில் அவசியம் இதற்கு மூலகர்த்தா சூரியனின் கருணையே தேவை. பயிரிடுதலுக்கும் உயிர்வாழ்தலுக்கும் பசுக்கள் எருதுகள் உதவிவேண்டும் ஆகவே தான் தைப்பொங்கல் நாளின் முதல்நாள் — மார்கழிஇறுதிநாள் போகிப்பண்டிகையும் தை முதல் நாள் தைப்பொங்சல் பண்டிகையும் மறுநாள் மாட்டுப்பொங்கல் பண்டிகையும் இதனை அடுத்த தினம் கன்னிப்பொங்கல் பண்டிகையும் கொண்டாடப்படுகின்றது.

போகிப்பண்டிகை என்பது; இந்துக்களின் வீடுகளில் பழையன கழிக்கப்பட்டு புதியனவுக்கு இடமளித்தல். புதுப் பொலிவு பெறுதலுக்கு வழிவகுத்தல். இன்று தமிழர் மத்தியில் தைப் பொங்கல் மதவேறுபாடுகளின்றி அனைவராலும் கொண்டாடப்படுகின்றது,

மாட்டுப்பொங்கல், மாடுகளிற்குச் செய் நன்றி செலுத்தும் பண்டிகையாக் கொண்டாடப் படுகின்றது.

கன்னிப்பொங்கல் என்பது, இளம்பெண்கள் கூட்டம் கூட்டமாகக்கூடி கும்மியடித்துக்கொண்டு ஆற்றங்கரைகளுக்குச் சென்று அங்கு கூட்டுப் பொங்கலிட்டு ஆற்றுக்குப் படைத்துப் பங்கிட்டு உண்டு மகிழ்ந்து வீடு திரும்பி மகிழ்வுறுதல் பண்டிகையாகும். இது பண்டைய கிராமங்களில் காணப்பட்டதாகும். இன்று அருகிவிட்டது.

தைப்பொங்கல், மாட்டுப் பொங்கல் என்பன உயிரோட்டமுள்ள உணர்வுபூர்வமான பண்டிகைகளாகும் இயற்கை — சூரியன் -யிலும் கால்நடைகள் மீதும் அன்பினை வளர்க்க, நன்றியுணர்வை வளர்க்க. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலை நினைவுபடுத்த ஏற்படுத்தப்பட்ட பண்பாட்டுப் பண்டிகையாகும்.

---

## பனைக் கவிஞர்

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை போல் பல பொருள்களுக்கும் செந்தமிழ் பாடல்களைப் பாடிய நவாலியூர் க. சோமசுந்தரப் புலவர் பாடிய " தல விலாசம் " ஈழ நாட்டின் பனை வளத்தை அருமையாக எடுத்துக் கூறுகிறது. புழுக்கொடியல் பற்றித் தனியாகவும் பாடல் பாடி. பனைமர வளத்தினை எடுத்துச் சொல்லியுள்ளார்.

## சுவாமி சிவாநந்தரின் அருளுரை

கத்தியையும் துப்பாக்கியையும் விட மனமும் அறிவும் உலகத்தை அதிகம் வசப்படுத்துகின்றன.

# கற்பகத்தின் குடும்பம்

கே. எம். தியாகராசா.

கற்பகத்தின் குடும்பம் மிகப் பெரியது. கிட்டத்தட்ட அந்தக் கொல்லை வேலிக்குள் முன்னூற்கு மேற்பட்டோர் அங்கத்தினராவர் பல வருடங்களாக எதுவித தொல்லைகளுக்கும் ஆளாகாமல் நிம்மதியாக வாழ்ந்து வரும் நாளில், ஒருநாள் அந்திவேளையில் மூத்தகற்பகம் ஒன்றுதன் ஆருயிர் தோழியைப் பார்த்து, அங்கே பாரடி சண்பகம் இரண்டு தடியன்கள் எங்கள் உறவினர்களின் உடல்களில் காயம் ஏற்படுத்திப் பார்க்கிருர்கள் எங்களின் குடும்பத்தை அழித்தொழிக்கும் படலம் ஆரம்பமாகி விட்டதடி. எங்களில் யார் நல்லவைரம்என்று பார்க்கிருர்கள். நன்றி கெட்ட மனிதசாதியடி என்பதற்கு சண்பகம் சொன்னது என்னதான் நாங்கள் ஆயிரம் நன்மைகள் செய்தாலும் இவர்கள் செய் நன்றி மறப்பவர்கள். பண ஆசை பிடித்தவர்கள் எம்மை அழித்துப் பணம் சம்பாதிக்க அவர்கள் ஒருபோதும் பின் நிற்பதில்லை. நாம் செய்யும் உதவிகளைக்கூட அவர்கள் பெரிதாக மதிப்பதில்லை என்று கற்பகம் கூற அவள்தோழி சண்பகம் முன்பிருந்த எஜமானர் மிகவும் நல்லவர். ஆனுல் இப்போதுள்ள அவரின் மகனே பணஆசை பிடித்தவன். பண்பில்லாதவன் என்ருள்.

மறுநாள்கற்பகத்தின் குடும்ப அங்கத்தவர்கள் பலர் ஈவிரக்கமற்று அழிக்கப் படுகின்றனர் அதனைக் கண்ட கற்பகம் பார்த்தாயா? சண்பகம் நான் நேற்று சொன்னேன்எங்கள் குடும்பத்தை அழித்தொழிக்கும் படலம் ஆரம்பமாகி விட்டதென்று. அது-எவ்வளவு உண்மை என்பது இன்று புரிகின்றதல்லவா

பல நாட்கள் சென்ற பின் மீண்டும்ஒருநாள் அதிகாலைவேளை திடீரென பத்துப் பதினைந்து பேர்வரையில். கோடரி ஆப்பு வல்லீட்டுக் குந்தி வாச்சி(சீவி)

முதலிய ஆயுதங்களுடன் வந்தனர் அவர்களைக் கண்ட கற்பகம் எனக்குப் பயமாக இருக்குது அதிட்டசம். இன்றைக்கு இவர்கள் யார்யாரை அழிக்கப் போகிறார்களோ தைபிறந்தால் வழிபிறக்குமென்று சொல்லுவர்களே இந்த மனிதர்கள் ஆனல் இந்தத் தையுடன் இந்தக் கொலைஞர்கள் குடும்பத்தையே அழித்து விடுவார்கள் போலிருக்கிறதே

எல்லாம் ஆண்டவன் விதிப்படி நடக்கும். எதற்கும் கலங்காதை என்று ஆறுதல் கூறினள் அவள் தோழி சண்பகம். ஆனல் அவள் மனமும் கலங்கியது

சண்பகத்தை விட கற்பகம் மிகவும் திடமான வைர உடலைப் பெற்றிருந்தாள் வந்தவர்களில் டலர் அங்குமிங்குமாக சென்று அவள் உறவினர்களை அழிக்க இருவர் அவளருகில் வந்து அவளை மாறிமாறி கோடாரியால் வெட்டி வீழ்த்தினர், அவள் வீழ்ந்ததைக் கண்ட தோழியோ பைத்தியம் பிடித்தவள் போலானுள். கற்பகத்தின் சகோதரர்கள் தாரை தாரையாக கண்ணீர் சொரிந்தனர். அவர்களின் கண்ணீர் நிலத்துள்ள காய்ந்த ஓலை (காவோலை) களிற் பட்டுத் தெறித்தன. கற்பகத்தின் தலைப்பாகத்தை விட்டு ஏனைய பாகங்களை கோடாரியால் துண்டு துண்டாக்கிப் பிழந்தனர். பிழந்தவற்றை வாச்சியால் சீவினர். அந்தக் கற்பகம் அழிக்கப்பட்டாலும் இன்னும் ஆயிரம் ஆயிரம் கற்பகங்கள் தோன்றலாம். ஆனாலும் மனித இனம் இவர்களை அழிக்காமல் இருக்க வேண்டுமே.


# கற்பகம்

**புதிய ஆண்டு சந்தா**

1990 தை மாதத்திலிருந்து புதிய சந்தா விபரம் பின்வருமாறு

தனிப் பிரதி ரூபா 4-00
ஆண்டுச் சந்தா ரூபா 60-00
(தபாற் செலவு உட்பட)

தனிப் பிரதிகள் பெற விரும்புவோர் உரிய தபாற் தலைகளை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

**கற்பகம்,**

**தெ. ப. பொ. கூ. ச. சமாசம்,**
**330 கே. கே. எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**

# பாம்போஷா

Palmposha

Nutritious Meal for the Family



INGREDIENTS BLACK GRAM ODIYAL GREEN GRAM RICE SOYA MILK & SUGAR

NETT WT 500g

METHOD MIX PALMPOSHA WITH THE SUFFICENT QUANTITY OF HOT MILK OR WATER TO THE REQUIRED CON SISTENCY IF NECESSARY ADD SUGAR TO TASTE

PRODUCT OF
PALMYRAH
DEVELOPMENT BOARD
SRI LANKA

பனை அபிவிருத்திச் சபை தயாரித்து வழங்கும் தரமான சத்துணவு.

## சகல கற்பகம் விற்பனை நிலையங்கள் மூலமும் விற்பனை செய்யப்படுகின்றன.

**வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்**

தொடர்பு:-

தலைமை அலுவலகம்,
பனை அபிவிருத்திச் சபை,
இல. 47, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.



உமா பிறிண்டேர்ஸ், 32, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.